[2002 ஏப்ரல் 3

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 66, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

66—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***2913**—திரு. சு. சிவராஜ்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சியில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் ஊராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துருக்கள் 2000-2001-ல் பெறப்பட்டது. அப்பள்ளியை உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1 இலட்சம் முழுவதுமாகச் செலுத்தப்படாததால் அந்த ஆண்டில் இப்பள்ளி உயர்மட்டக் குழுவால் தேர்வு செய்யப்படவில்லை.

2001-2002 ஆம் கல்வியாண்டில் ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரிக்கக் கோரி கருத்துருக்கள் எதுவும் பெறப்படவில்லை.

பொதுமக்கள் பங்குத் தொகையை முழுவதுமாகச் செலுத்தி, வரும் கல்வியாண்டில் ரிஷிவந்தியம் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைப் பிரித்து புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்க அனுமதி கோரி, கருத்துருக்கள் பெறப்பட்டு, உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், அரசின் நிதிநிலைமைக்குட்பட்டு புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி

2002 ஏப்ரல் 3]

தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் பகுதி என்பது மிகவும் பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். அங்கே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியிலே தற்போது 1967 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். அதிலே மாணவியருடைய எண்ணிக்கை 719. ஏறத்தாழ மூன்றிலே ஒரு பங்கு மாணவிகள் அங்கே படிக்கின்றார்கள். இந்தப் பள்ளியைச் சுற்றி 15 கிலோ மீட்டர் தொலைவிற்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளி என்று எதுவும் இல்லை. ஆகவே, அமைச்சர் குறிப்பிட்டதைப்போல அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்குத் தொகையைச் செலுத்துவதற்கு அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் தயாராக இருக்கின்றார்கள். தேவையான இடமும் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டு அந்தப் பங்குத் தொகையைச் செலுத்தினால், அரசு உடனடியாக அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்கு ஆவன செய்யுமா? இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே மகளிர் நலத் திட்டங்களை முன்னோடி மாநிலமாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த ஆண்டு அந்தப் பள்ளியைத் தொடங்குவதற்கு அனுமதி அளிக்குமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-2002 திங்கட்கிழமை அன்று இந்த அவையிலே உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கு வேண்டிய தகுதியைப் பற்றி விளக்கும்போது, பொதுமக்கள் பங்காக ரூ.2 இலட்சம் கட்ட வேண்டும் என்றும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்றால், ரூ.1 இலட்சம் கட்ட வேண்டும் என்றும் சொன்னேன். அப்போது சில மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும்போது அது கட்டாயம் தேவையா என்று கேட்டார்கள். அப்போது அது இல்லாமலும் செய்யலாம் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். ஆனால், உண்மையிலேயே தரப்பட்ட கணக்கு குறிப்பு அப்படி இருந்தது. ஆனால், இன்று அந்த அரசாணையைப் பார்க்கும்போது முழுவதும் அவர்கள் அந்தத் தொகையை ரூ. 1 இலட்சம், ரூ. 2 இலட்சம் கட்டினால்தான் அவர்களுக்குத் தரமுடியும் என்ற விதிமுறை இருக்கிறது. ஆகவே, அந்த ரிஷிவந்தியம்

பள்ளிக்கு அவர் சொன்னதைப்போல முறைப்படி உயர்நிலை தரவேண்டிய அவசியம் இருக்கிறது. காரணம் 1950 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அவர் சொன்னதுபோல் பெண்களும் 714-க்கு மேல் படிக்கின்றார்கள். ஆகவே, அது பின்தங்கிய பகுதி. மகளிர் ஓர் உயர்நிலை அடைவதற்காக நல்ல கல்வி தர வேண்டிய ஒரு அவசியமான நிலை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், நீங்கள் சொன்னதைப்போல மக்கள் கட்ட வேண்டிய அந்த 1 இலட்சம் ரூபாயைக் கட்டி, முடிப்பீர்கள் என்றால், இந்தக் கல்வியாண்டில் அந்தக் கருத்துரு பெற்று அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப செயல்பட முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திரு. பி. எம். நரசிம்மன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

67—

ஆசிரியர்கள் நியமனம்

***3230—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பள்ளிகளில் மரவேலை, விவசாயம், நெசவு மற்றும் கைத்தொழிற் பயிற்சி துறைகளுக்கு ஆசிரியர்களின் நியமனம் தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மரவேலை, விவசாயம் மற்றும் நெசவு ஆசிரியர் பணி நியமனத்திற்குத் தடைசெய்து அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் தமிழகத்தில் ஏட்டுக் கல்வியைவிட வாழ்க்கைக்கு உதவுகிற தொழிற் கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். படித்துமுடித்து பள்ளியைவிட்டுச் செல்கின்றபோது ஒரு தொழில் அறிந்தவராகவும்,